DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

*******

IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,

**PALLAVARAM.**

| | |
|---|---|
| CC.No. | 107 /2023 |
| Prosecution: | அ.சா.3 |

| | | |
|---|---|---|
| **Deposition of witness for Name** | ~ | சதிஷ்குமார்(காவல் உதவி ஆய்வாளர்) |
| **Father Name** | ~ | இசக்கிமுத்து |
| **Village** | ~ | |
| **Taluk** | ~ | |
| **Caste** | ~ | |
| **Calling** | ~ | |
| **Religion** | ~ | |
| **Age** | ~ | |

Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 on the day of **Dt.** 21.01.2026

**முதல் விசாரணை**

1. நான் தற்போது பல்லாவரம் காவல் நிலையத்தில் சட்டம் ஒழுங்கு பிரிவில் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகின்றேன். இவ்வழக்கின் விசாரணை அதிகாரி ரமாபிரபா என்பவரை நன்கு தெரியும். அவர் தற்போது பணி உயர்வு பெற்று பணி மாறுதலில் வேறு காவல் நிலையத்திற்கு சென்று விட்டார். அவரது கையொப்பம் நன்கு பரிச்சயம். அவர் தாக்கல் செய்த ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 26.11.2020 அன்று மாலை 6 மணி அளவில் பல்லாவரம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக நிலைய அலுவலில்

இருந்தபோது தேவி என்பவர் நிலையம் ஆஜராகி சண்டை வழக்கு தொடர்பாக கொடுத்த எழுத்துப்பூர்வமான புகார் மனுவை பெற்று நிலைய குற்ற எண்.1058/2020 சட்டப்பிரிவுகள் 341, 294 பி, 324, 427,506(2) இ.த.ச.வின் கீழ் சம்பத், கோபால் , கார்த்திகேயன் மற்றும் தினேஷ்குமார் ஆகியோருக்கு எதிராக வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்.. **புகார் மனு அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. புகார்தாரரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சம்பவத்தில் காயம்பட்ட சாட்சியான பூபதி மற்றும் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகளான பிரபாவதி, வாசுதேவன் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ரமேஷ், துரைநரசிம்மன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. **பார்வை மகசர் அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் சம்பவ இடத்திலிருந்து சேதமடைந்த டிவி ஒன்றை மேற்குறிப்பிட்ட சாட்சிகளின் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியுள்ளார். கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.6 குறியீடு செய்யப்படுகிறது.

3. பின்பு இவ்வழக்கில் எதிரிகளான கார்த்திகேயன், தினேஷ்குமார், சம்பத் ஆகியோர்களை கடந்த 26.11.2020 ஆம் தேதி இரவு 8.30 மணிக்கு பழைய பல்லாவரம் கண்ணபிரான் தெருவில் வைத்து சாட்சிகள் அடையாளம் காண்பித்து மேற்படி எதிரிகளை கைதிற்கான காரணம் கூறி கைது செய்துள்ளார். மேற்படி எதிரிகளில் 1வது எதிரி கார்த்திகேயன் எவ்வித அச்சுறுத்தலும், துன்புறுத்தலும் இன்றி தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் ஜெயக்குமார், காதர் உசேன் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்துள்ளார்.

**ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதியான "கம்பி மற்றும் கட்டையை எடுத்து ஆஜர் செய்கிறேன்" அ.சா.ஆ. 7 ஆக குறியீடு** செய்யப்படுகிறது.

4. மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் மேற்படி சாட்சிகளின் முன்னிலையில் வழக்கு சொத்தான இரும்பு ராடு ஒன்று, மரக்கட்டை ஒன்று ஆகியவற்றை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியுள்ளார். **கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ. 8 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. மேற்படி சாட்சிளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அன்றைய தினமே மேற்படி 3 எதிரிகளை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். பின்பு இவ்வழக்கில் காயம்பட்ட பூபதி என்பவருக்கு விபத்து பதிவேடு பதிவு செய்து சிகிச்சையளித்து மேற்படி நபருக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என்று சான்று வழங்கிய தாம்பரம் அரசு மருத்துவமனை மருத்துவர் சோமசுந்தரம் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **அ.சா.2–ன் விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்றிதழ் அ.சா.ஆ. 9 ஆக குறியீடு** செய்யப்படுகிறது.

5. இவ்வழக்கின் 4வது எதிரியான கோபால் என்பவரை 28.11.2020 ஆம் தேதி மதியம் 2.15 மணிக்கு தர்கா சாலை சப்வே அருகில்வைத்து கைது செய்து அதே தேதியில் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். பின்பு இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தான உடைந்த டிவி ஒன்றை படிவம் 95 மூலம் இந்நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளார். **படிவம் 95 அ.சா.ஆ. 10 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. மற்றொரு வழக்கு சொத்துகளான இரும்பு ராடு மற்றும் மரக்கட்டை படிவம் 95 மூலம் இந்நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளார். **படிவம் 95 அ.சா.ஆ. 11 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. **உடைந்த டிவி அ.சா.பொ. 1 , இரும்பு ராடு அ.சா.பொ.2, மரக்கட்டை அ.சா.பொ.3 ஆக குறியீடு** செய்யப்படுகிறது.

இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரிகள்மீது 341, 294 பி, 324, 427,506(2) இ.த.ச.வின் கீழ் 07.12.2020 ஆம் தேதி நீதிமன்றத்தில் குற்ற இறுதி

அறிக்கை தாக்கல் செய்துள்ளார். புலன் விசாரணை அதிகாரி விசாரணையில் சாட்சிகள் உள்ளது உள்ளவாறே வாக்குமூலம் அளித்து உள்ளார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது என்றாலும் இவ்வழக்கை சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிகளுக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

S/d xxxx

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

**S/d C.P. Mullai Vanan**
District Munsif-cum
Judicial Magistrate
Pallavaram.